# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 153/மா/2018**

**நாள் : 26/10/2018**

02.07.2018 நாளிட்ட
தினமணி நாளிதழ் செய்தி – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் – 9,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, 9–வது மண்டலம், 117–வது வார்டு, தெற்கு போக் சாலை, அரசு புறம்போக்கு நிலத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டப்பட்டுள்ளது குறித்து "அகற்றப்படாத ஆக்கிரமிப்பால் கட்டப்படாத திருமண மண்டபம்" என்ற செய்தி 02.07.2018 நாளிட்ட தினமணி நாளிதழில் வெளியாகி இருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை முறையீட்டு மனுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 153/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சி, 9–வது மண்டல அலுவலரிடம் மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, 9–வது மண்டலம், தெற்கு போக் சாலை, மாம்பலம் கால்வாயை ஒட்டியுள்ள அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளதால், மத்திய சென்னை மக்களவை உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் திருமண மண்டபம் கட்டுவதற்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளதென்று தெரிவித்து மேற்குறிப்பிட்ட நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது. இச்செய்தி குறித்து 9–வது மண்டல அலுவலர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

2. சென்னை, தெற்கு போக் சாலை, மாம்பலம் கால்வாயை ஒட்டி மாநகராட்சி நடுநிலைப்பள்ளி அமைந்துள்ளது என்றும், அப்பள்ளியை ஒட்டியுள்ள நிலம் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருந்தது என்றும் 9–வது மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 2016–ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்திருந்த 66 குடிசைவாசிகள் அப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டு, அவர்களுக்கு பெரும்பாக்கம் பகுதியில் மாற்று இடம் வழங்கப்பட்டதென்றும் தெரிவித்துள்ளார். எனினும், தெற்கு போக் சாலையை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த கடைகள் அகற்றப்படவில்லை என்றும், 16 எண்ணிக்கை கடைகள் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் அமையப் பெற்றுள்ளன என்பதை உறுதி செய்த பின்னர், 28.07.2018 அன்று அக்கடைகளை அகற்றக் கோரி 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டப் பிரிவு 222–இன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டதென்றும், அவ்வறிவிப்பினை எதிர்த்து எட்டு நீதிப்பேராணை மனுக்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்று தெரிவித்து மாநகராட்சி தாக்கல் செய்துள்ள எதிர் வாதுரை மனுக்களையும் 9–வது மண்டல அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனுக்களை பரிசீலனை செய்த மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் 07.08.2018 அன்று வழங்கிய இடைக்காலத் தடை ஆணையின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

3. 2016–ஆம் ஆண்டில் தெற்கு போக் சாலை அரசுக்கு சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த 66 குடிசைகள் அகற்றப்பட்டன என்றும், ஆனால் அங்கு அமைக்கப்பட்டிருந்த கடைகள் அப்போது அகற்றப்படவில்லை என்று 9–வது மண்டல அலுவலரே தெரிவித்துள்ளார். அப்பகுதியில் திருமண மண்டபம் கட்ட ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், ஆக்கிரமிப்பு அகற்றப்படாததால் திருமண மண்டபமும் கட்டப்படாமல் 6 திங்கள்கள் கடந்து விட்டன என்று நாளிதழ் செய்தி மூலம் அறிய முடிகிறது. 02.07.2018 அன்று தினமணி நாளிதழில் மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு மற்றும் திருமண மண்டபம் கட்டப்படாதது குறித்து செய்தி வெளியான பின்பே ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி 28.07.2018 நாளிட்ட அறிவிப்பு 9–வது மண்டல அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆக்கிரமிப்புதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்களை தாக்கல் செய்து இடைக்காலத் தடையும் பெற்றுள்ளனர். 2016–ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டிருந்த குடிசைகளை அகற்றியவுடன், ஆக்கிரமிப்புக் கடைகளையும் அகற்ற நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம் அல்லது திருமண மண்டபம் கட்ட நிதி ஒதுக்கீடு பெற்றபின்பாவது ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற 9–வது மண்டல அலுவலர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கலாம். சென்னை மாநகராட்சி, 9–வது மண்டல அலுவலர்களின் காலம் தாழ்த்திய நடவடிக்கையினால், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டும், அப்பகுதி ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் திருமண மண்டபம் கட்டப்படாமலேயே காலம் தாழ்த்தப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிப்பேராணை வழக்குகளை தொடர்ந்து கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 9–வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/10/2018

செயலாளர்.

பெறுநர்

1. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 9,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.4, 4–வது குறுக்குத் தெரு,
   லேக் வியூ சாலை, சென்னை – 600 034.

2. மாநகராட்சி ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் கட்டிடம்,
   சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்